TAMILTH Coimbatore 1 Regional_04 V.K. SAMINATHAN 220106 13793548

சென்னை குன்றத்தூரை அடுத்த கோவூரில் உள்ள 1,300 ஆண்டுகள் பழமையான சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் கோயில் சுந்தர சோழனால் கட்டப்பட்டது. பல்லவர்கள் கட்டும் கோயில்கள் வழக்கமாக கிழக்கு நோக்கி அமைந்திருக்கும். இக்கோயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோயில் பரமேச்சுர விண்ணகரம் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயில் பல்லவ மன்னன் 2-ம் நந்திவர்மன் காலத்தில் 8-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கோயில் உட்புறச் சுவர்களில் உள்ள சிற்பங்களின் மூலம் பல்லவர்களின் அரசியல் வரலாற்றை அறியலாம்.

சின்னச் சின்னதாய்

கோவை செம்மொழிப் பூங்காவை உருவாக்க சிறப்பாக பணியாற்றியதற்காக மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோருக்கு முதல்வர் ஸ்டாலின் சால்வை அணிவித்து பாராட்டினார்.

'ப்ரண்ட்ஸ்' மருத்துவமனையில் பிசியோதெரபி ஆலோசனை முகாம்

ராஜேஸ் கண்ணா

கோவை

கோவை சரவணம்பட்டி மற்றும் விஸ்வாசபுரம் டெக்ஸ்டூல் நகரில் இயங்கிவரும் ப்ரண்ட்ஸ் பிசியோதெரபி மருத்துவமனைகளில், இலவச பிசியோதெரபி மருத்துவ ஆலோசனை முகாம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை நடக்கிறது.

இந்த முகாமில், நாள்பட்ட சர்க்கரை நோயால் ஏற்படும் தோள்பட்டை மூட்டு இறுக்கம், தொடை மற்றும் கால் வலி, பாத எரிச்சல் மற்றும் மரமரப்பு, கழுத்து வலி, முதுகு வலி, இடுப்பு வலி, முழங்கால் மூட்டு வலி, குதிகால் வலி, முதுகுத் தண்டுவட பாதிப்பு, பக்கவாதம், முக வாதம், கை கால் செயலிழப்பு, மூளை முடக்குவாதம், சரவாங்கி, ஒற்றை தலைவலி, வெரிகோஸ் வெயின் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு இலவச பிசியோதெரபி மருத்துவ ஆலோசனை வழங்கப்படுகிறது.

இந்த முகாமில் கலந்து கொண்டு பிசியோதெரபி சிகிச்சை எடுப்பவர்களுக்கு மருத்துவ கட்டணத்தில் 20 சதவீதம் சலுகை வழங்கப்படுகிறது. இந்த முகாமினை ப்ரண்ட்ஸ் பிசியோதெரபி மருத்துவமனையின் தலைமை எலும்பியல் பிசியோதெரபி மருத்துவர் ராஜேஸ் கண்ணா மற்றும் தலைமை நரம்பியல் பிசியோதெரபி மருத்துவர் அம்ச வள்ளி ஆகியோர் தொடங்கி வைத்து ஆலோசனை வழங்குகிறார்கள்.

பொது பிசியோதெரபி மருத்துவர்கள் பரத்குமார், நிவேதா, கமலி மற்றும் ஜஸ்டினா ஆகியோர் பங்கேற்கிறார்கள். இலவச இணைய வழி ஆலோசனை வசதியும் உள்ளது. இம்முகாமில் பங்கு பெற 9843239971, 9626342326 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

மாணவியை பிரம்பால் அடித்த பள்ளி ஆசிரியை பணியிடை நீக்கம்

கோவை

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி அருகே உள்ள எலச்சிபாளையம் அரசு நடுநிலைப்பள்ளியில் பயிலும் 2-ம் வகுப்பு மாணவியை, ஆசிரியை பெரியநாயகி பிரம்பால் தாக்கியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இம்மாத தொடக்கத்தில் நடந்த இந்த சம்பவத்தில் காயம்பட்ட மாணவி தனியார் மருத்துவமனையிலும், அதன்பின் கோவை அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டார்.

இதுதொடர்பாக கடந்த 26-ம் தேதி கருமத்தம்பட்டி போலீஸில் மாணவியின் பெற்றோர் புகார் அளித்தனர். போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்நிலையில், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் ரவிச்சந்திரன் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தினர். இதன் தொடர்ச்சியாக ஆசிரியை பெரியநாயகியை பணி இடை நீக்கம் செய்து பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

உரிய ஆவணங்கள் இல்லாமல் கோவையிலிருந்து

கேரளாவுக்கு கடத்த முயன்ற ரூ.40 லட்சம் ரொக்கம் பறிமுதல்

கோவை

கோவையிலிருந்து கேரளாவுக்கு உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.40 லட்சத்தை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

கோவை க.க.சாவடி போலீஸார் தமிழக - கேரள எல்லையான வேலந்தாவளம் சோதனைச் சாவடியில் நேற்று காலை வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கோவையிலிருந்து இருசக்கர வாகனத்தில் வந்த நபரை தடுத்து நிறுத்தி விசாரித்தனர். இரு சக்கர வாகனத்தின் முன்பக்கத்தில் ஒரு பை இருந்தது.

சந்தேகத்தின் பேரில், போலீஸார் அந்த பையை திறந்து பார்த்தபோது, பேப்பரில் சுற்றப்பட்டு, கட்டுக் கட்டாக 500 ரூபாய் நோட்டுகள் இருந்தன. மொத்தம் 16 கட்டுகளில் ரூ.40 லட்சம் இருந்ததும், பணத்தை எடுத்து வந்தவர் கேரள மாநிலம் ஒட்டப்பாலத்தைச் சேர்ந்த நகைக்கடை ஊழியர் சுதீர்(55) என்பதும் தெரியவந்தது.

கோவை பி.கே.வீதியில் உள்ள ஒரு வாடிக்கையாளரிடம் தங்கத்தை ஒப்படைத்துவிட்டு, ரூ.40 லட்சம் வாங்கி செல்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

முறையான ஆவணங்கள் இல்லாததால் பணத்தை போலீஸார் பறிமுதல் செய்து, கோவை மண்டல வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் காவல் நிலையத்துக்கு வந்ததும், பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் சுதீரை போலீஸார் ஒப்படைத்தனர். வருமான வரித்துறை அதிகாரிகள் சுதீரிடம் விசாரித்து வருகின்றனர்.

கோவை மெட்ரோ ரயில் விவகாரம் தொடர்பாக

மாநகராட்சி கூட்டத்தில் திமுக-அதிமுக கவுன்சிலர்கள் மோதல்

அதிமுக கவுன்சிலர் 2 மாதம் 'சஸ்பெண்ட்'

கோவை

கோவை மாநகராட்சி கூட்டத்தில், மெட்ரோ ரயில் திட்டம் தொடர்பாக திமுக - அதிமுக கவுன்சிலர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக, அதிமுக கவுன்சிலர் பிரபாகரனை இரு மாதங்கள் சஸ்பெண்ட் செய்வதாக மேயர் கா.ரங்கநாயகி அறிவித்தார்.

கோவை மாநகராட்சி மன்ற கூட்டம் மேயர் கா.ரங்கநாயகி தலைமையில் நேற்று நடைபெற்றது. மாநகராட்சி ஆணையர் மா.சிவகுருபிரபாகரன் முன்னிலை வகித்தார். கூட்டம் தொடங்கியதும், கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்த மத்திய அரசுக்கு கண்டனம் தெரிவித்து, மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என திமுக மற்றும் காங்கிரஸ் கவுன்சிலர்கள் வலியுறுத்தினர்.

அப்போது, அதிமுக கவுன்சிலர் பிரபாகரன் எழுந்து, திமுக அரசு மெட்ரோ ரயில் திட்ட அறிக்கையை முறையாக தயாரிக்காததால்தான் திட்டம் பறிபோனது எனத் தெரிவித்ததுடன், அது தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி நின்றார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த திமுக கூட்டணி கவுன்சிலர்கள், அதிமுக கவுன்சிலர்கள் பிரபாகரன், ரமேஷ்குமார் ஆகியோரை சூழ்ந்து கொண்டு முழக்கங்கள் எழுப்பினர். இரு தரப்பிலும் கடுமையான வாக்குவாதம் நடந்த நிலையில், பிரபாகரன் கையில் வைத்திருந்த பதாகைகளை திமுக கவுன்சிலர்கள் பிடுங்கி கிழித்து எறிந்தனர். இதனைதொடர்ந்து, அதிமுக கவுன்சிலர்கள் இருவரும் கூட்ட அரங்கில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

கோவை மாநகராட்சி கூட்டத்தில், மெட்ரோ ரயில் திட்டத்தை தமிழக அரசு தடுப்பதாக, அதிமுக கவுன்சிலர் பிரபாகரன் பதாகையை காட்டிய நிலையில், அதனை பறிக்க முற்பட்ட திமுக கூட்டணி கவுன்சிலர்கள். படம்: ஜெ.மனோகரன்

தொடர்ந்து நடந்த மாநகராட்சி கூட்டத்தில், கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்த மத்திய அரசை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மாநகராட்சி கூட்ட அரங்கில் ரகளையில் ஈடுபட்ட அதிமுக கவுன்சிலர் பிரபாகரன் இரு மாதங்களுக்கு சஸ்பெண்ட் செய்யப்படுவதாக மேயர் ரங்கநாயகி அறிவித்தார்.

போட்டி போராட்டம்

முன்னதாக, கூட்டத்தில் பங்கேற்க வந்த அதிமுக கவுன்சிலர்கள், மெட்ரோ ரயில் திட்டம் வரக்கூடாது என்பதற்காக தமிழக அரசு தவறான திட்ட அறிக்கையை தயார் செய்து அனுப்பியதாக குற்றஞ்சாட்டியதுடன், அது தொடர்பான பதாகைகளுடன், மாநகராட்சி வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி அளிக்காத மத்திய அரசைக் கண்டித்து திமுக மற்றும் கூட்டணி கட்சி கவுன்சிலர்கள் போட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். கோவை மாநகராட்சி மன்ற வளாகம் முன்பு இரண்டு தரப்பும் மாறி மாறி முழக்கம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது.

செம்மொழிப்பூங்கா கட்டணம் நிர்ணயம்

கோவை காந்திபுரத்தில் 45 ஏக்கர் பரப்பளவில் 208 கோடி மதிப்பீட்டில் செம்மொழி பூங்கா திறக்கப்பட்டது. வரும் டிசம்பர் 1-ம் தேதி முதல் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு பூங்கா திறந்துவிடப்பட உள்ளது. இந்நிலையில், நேற்று நடைபெற்ற மாநகராட்சி கூட்டத்தில், செம்மொழி பூங்காவில் பெரியவர்களுக்கு ரூ.15, குழந்தைகளுக்கு ரூ.5 என நுழைவு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு ஒப்புதல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் நடைபயிற்சி செல்ல மாதாந்திர கட்டணமாக ரூ. 100, கேமராவிற்கு ரூ.25, வீடியோ கேமராவிற்கு ரூ.50 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

திரைப்பட ஒளிப்பதிவுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரமும், குறும்பட ஒளிப்பதிவுக்கு ரூ.2000 எனவும், பெரியவர்களுக்கு நுழைவு கட்டணமாக ஆண்டுக்கு ரூ.1,000 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. செம்மொழிப் பூங்காவுக்கு வரும் பார்வையாளர்கள் வாகனங்களை நிறுத்த ஏற்கெனவே கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு மணி நேரத்திற்கு இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.5 வீதமும், நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ.10 வீதமும், பேருந்துகளுக்கு ரூ.30 வீதமும் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது.

கோவை மக்களையும், தொழில் துறையினரையும் திமுக அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கை: கோவையில் கடந்த நவ.25-ம் தேதி சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலின், காந்திபுரம், சிறைச்சாலை மைதான வளாகத்தில் ரூ.204 கோடியில் கட்டப்பட்டு வந்த செம்மொழி பூங்காவை பணிகள் முழுமையாக முடிவடையாமல், அவசர கதியில் திறந்து வைத்துள்ளார். சுமார் 70 சதவீத பணிகள் மட்டுமே முடிவடைந்துள்ளதாக கோவை மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். போதுமான கழிப்பிட வசதி போன்றவை ஏற்படுத்தப்படவில்லை.

அதிமுக ஆட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பல பூங்காக்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் போதிய பராமரிப்பின்றி கேட்பாரற்று உள்ளது. திமுக அரசு பொறுப்பேற்று 5 ஆண்டுகள் முடிவடைய உள்ள நிலையில், இதுவரை கோவை மாவட்ட மக்களையும், தொழில் துறையினரின் கோரிக்கைகளையும் திமுக அரசு தொடர்ந்து புறக்கணித்தே வருகிறது.

அத்திக்கடவு - அவிநாசி திட்டம் 1-ல் விடுபட்ட பகுதிகளை இணைத்து அதிமுக அரசு அறிவித்த திட்டம்-2ஐ திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளது. கோவை மாநகராட்சியால் 61 ஏக்கரில் ரூ.168 கோடியில் அறிவிக்கப்பட்டு, 50 சதவீத பணிகள் நிறைவடைந்த ஒருங்கிணைந்த பேருந்து நிலைய திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ரூ.150 கோடியில் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில், அதை திமுக அரசு ரத்து செய்தது. கோவை மாவட்ட வளர்ச்சிக்கு நாங்கள் திட்டமிட்ட, கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை சரியான முறையில் முன்மொழிவு அனுப்பாத காரணத்தால் இத்திட்டம் மத்திய அரசால் திருப்பி அனுப்பப்பட்டது. கோவை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய, தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில் இத்திட்டத்தையும் கிடப்பில் போட்டுள்ளது.

இப்படி அதிமுக அரசு கொண்டு வந்த பல திட்டங்களை திமுக அரசு, கைவிட்டுவிட்டது. இந்நிலையில், அரைகுறையாக இந்தப் பூங்காவை திறந்து வைத்துள்ளார். திமுக அரசுக்கு 2026 தேர்தலில், கோவை மாவட்ட மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில்

கைதான மூவரும் மேலும் ஒரு வழக்கில் கைது

கோவை

கோவை பீளமேட்டில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில், கருப்புசாமி(30), காளீஸ்வரன் (21), தவசி(20) ஆகியோரை கடந்த 3-ம் தேதி நள்ளிரவு போலீஸார் சுட்டுப்பிடித்து கைது செய்தனர்.

முன்னதாக, வெள்ளகிணறு அருகே காட்டுப் பகுதியில் மறைந்திருந்த மூவரையும் பிடிக்க, இன்ஸ்பெக்டர்கள் அர்ஜுன்குமார், ஞானசேகரன் தலைமையிலான தனிப்படை போலீஸார் அங்கு சென்றபோது, அரிவாளால் போலீஸாரை வெட்டிவிட்டு தப்ப முயன்றனர். அதில், போலீஸ்காரர் சந்திரசேகர் என்பவர் காயமடைந்தார். தொடர்ந்து அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக இன்ஸ்பெக்டர் ஞானசேகரன் துடியலூர் போலீஸாரிடம் புகார் அளித்தார். போலீஸார் 2 பிரிவுகளின் கீழ் கருப்புசாமி, காளீஸ்வரன், தவசி ஆகியோர் மீது வழக்குப்பதிந்தனர். இந்த வழக்கில் நேற்று முன்தினம் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

அதேபோல், மூவரையும் பாலியல் வன்கொடுமை வழக்கில் விசாரிப்பதற்காக நேற்று முன்தினம் போலீஸார் ஒருநாள் காவலில் எடுத்தனர். பீளமேட்டில் வைத்து அவர்களிடம் விசாரித்தனர். அவர்கள் தெரிவித்த வாக்குமூலங்கள் வீடியோவில் பதிவு செய்யப்பட்டன. கஸ்டடி விசாரணை முடிந்து மூவரும் நேற்று கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டதைத் தொடர்ந்து மூவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

sarvakumar.m@hindutamil.co.in

ரோலக்ஸ் யானை உயிரிழப்புக்கு 'திடீர்' இதய செயலிழப்பு காரணம்

உடற்கூராய்வில் தகவல்

பொள்ளாச்சி

கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் பிடிக்கப்பட்ட ரோலக்ஸ் என்ற 50 வயதுடைய ஆண் யானை, ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள வரகளியாறு முகாமில் வைத்து பராமரிக்கப்பட்டது. பின்னர், ரேடியோ காலர் பொருத்தப்பட்டு, மானாம்பள்ளி வனச்சரகப்பகுதியில் விடுவிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 26-ம் தேதி நீர்நிலைக்கு அருகில் யானை உயிரிழந்து கிடந்தது. யானையின் சடலம் நேற்று முன்தினம் உடற்கூராய்வு செய்யப்பட்டது.

இது குறித்து வனத்துறையினர் கூறியதாவது: நீர்நிலைக்கு அருகில் குறைந்த சரிவு கொண்ட பகுதியில் சுமார் 25 மீட்டர் தொலைவுக்கு யானையின் கால் தடங்கள் வழுக்கி சென்று இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் யானையின் சடலம் இடது பக்கவாட்டு சாய்வில் மீட்கப்பட்டது. நேற்று முன்தினம் வன கால்நடை மருத்துவ குழுவினர் நடத்திய பிரேத பரிசோதனையில் யானையின் உடலில் வெளிப்புறத்தில் கால்களில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. உடலின் உட்புறத்தில், பெருமூளைப் புறணியில் மிதமான நெரிசலும், இதயத்தில் பெரிகார்டியம் தடித்தும் காணப்பட்டது.

மேலும் ரத்தக் கசிவுகளும், கல்லீரல் காப்ஸ்யூல் தடிமனாகவும், எளிதில் உரிக்கப்படாமல், வட்டமான எல்லைகளுடன் உறுதியான நிலைத்தன்மையுடன் காணப்பட்டது. பிரேத பரிசோதனையில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் சென்னையில் உள்ள தனுவாஸ் மத்திய பல்கலைக்கழக ஆய்வகம், மருந்தியல் விழிப்புணர்வு ஆய்வகம், மேம்பட்ட வன விலங்கு பாதுகாப்பு நிறுவனம், பிராந்திய தடயவியல் ஆய்வகம், கோவையில் உள்ள சக்கான் ஆய்வகம் ஆகியவற்றுக்கும், மாநிலத்திற்கு வெளியே உத்தர பிரதேசம் பரேலியில் உள்ள ஐவிஆர்ஐ ஆய்வகம், கேரளா மாநிலம் வயநாட்டில் உள்ள கேரள வன வனவிலங்கு நோய் கண்டறியும் ஆய்வகம் ஆகியவற்றுக்கும் அனுப்பப்படும்.

ரோலக்ஸ் யானையின் இறப்புக்கு காரணம் திடீர் இதய செயலிழப்பு மற்றும் ஒரே நேரத்தில் ஹெபடைடிஸ்டன் தொடர்புடைய ஹீமோபெரிகார்டியம் என தெரியவந்துள்ளது. இவ்வாறு வனத்துறையினர் தெரிவித்தனர்.

> யானையின் உடலில் வெளிப்புறத்தில் கால்களில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. உடலின் உட்புறத்தில், பெருமூளைப் புறணியில் மிதமான நெரிசலும், இதயத்தில் பெரிகார்டியம் தடித்தும் காணப்பட்டது.

ujjivan SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.18 SF எண்.156/B & 156/B9, சங்கம் தெரு, சுந்தரபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641024

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	13.11.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1184230050000003 & 1184220280000004 / 1.M/s.ஒரிஜினல் ஹோமியோ டேடிக்கல்ஸ், 2.Mrs.கவிதா மீனாட்சி சுந்தரம், 3.Mr.மீனாட்சி சுந்தரம் ராமலிங்கம், 4.M/s.சுந்தர் ஹோமியோ ஏஜென்சிஸ்	(i) 20.09.2024 (ii) 16.09.2024 அன்றுள்ளபடி ₹1,16,34,849/- (ரூபாய் ஒரு கோடியே பதினாறு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஒன்பது மட்டும்) (ii) அடையாளமுள்ள சுவாதீனம் - 14.02.2025 & நேரடி சுவாதீனம் - 04.06.2025	₹ 1,35,02,596.19 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஐந்து லட்சத்து இரண்டாயிரத்து ஐநூறு தொண்ணூறாறு ஆறு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்)	₹ 1,01,83,200/- (ரூபாய் ஒரு கோடியே ஒரு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்)	₹ 10,18,320/- (ரூபாய் பத்து லட்சத்து பதினொட்டாயிரத்து முன்னூற்று இருபது மட்டும்)

சொத்து விவரம்: ஐட்டம் எண்.1: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்கள்.286/1B, 289/3A பகுதி, **"தோப்பில் நகர்" என்றழைக்கப்பட்டு இதில் மனை எண்.5, வடவள்ளி கிராமம், கோயம்புத்தூர் தாலுகா என்னும் முகவரியில் 1920 சதுர அடி அல்லது 4 சென்ட் 178 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம்,** பொது சாலை உபயோகிக்கும் உரிமை மற்றும் அனைத்து அனுபந்த உரிமைகள் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மனை எண்.4-க்கு வடக்கு, மனை எண்.6-ல் உள்ள தெற்கு பகுதிக்கு தெற்கு, S.F.எண்.289/1-ல் உள்ள நிலத்திற்கு கிழக்கு, 20 அடி அகல வடக்கு தெற்கு சாலைக்கு மேற்கு அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில்: 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கில்: 60 அடி, வடக்கு தெற்காக கிழக்கில்: 32 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 32 அடி

ஐட்டம் எண்.2: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்கள்.286/1B, 289/3A பகுதி, **"தோப்பில் நகர்", என்றழைக்கப்பட்டு இதில் மனை எண்.6, வடவள்ளி கிராமம், கோயம்புத்தூர் தாலுகா என்னும் முகவரியில் 1920 சதுர அடி நிலம் இதில் தெற்கு பகுதி 900 சதுர அடி அல்லது 2 சென்ட் 29 சதுர அடி நிலம்** எல்லைகள்: மனை எண்.5-க்கு வடக்கு, மனை எண்.6-ல் உள்ள வடக்கு பகுதிக்கு தெற்கு, S.F.எண்.289/1-ல் உள்ள நிலத்திற்கு கிழக்கு, 20 அடி அகல வடக்கு தெற்கு சாலைக்கு மேற்கு அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில் 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 60 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் 15 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 15 அடி

மொத்த பரப்பு 2820 சதுரஅடி அல்லது 6 சென்ட் 206 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம், பொது சாலை உபயோகிக்கும் உரிமை மற்றும் அனைத்து இதர அனுபந்த உரிமைகள் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அதன் சொத்து வரி எண்.169109.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 24.12.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 23.12.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	22.12.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 29.11.2025

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்